பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 27 சனிக்கிழமை (12 –08 –1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 260

# அரசின் யோசனை:ராணுவ தீர்வை நியாயப்படுத்தும் ஏமாற்று முகமூடி!

## விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து விளக்கம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 12

சந்திரிகா அரசு அறிவித்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் நிலையான சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்கும் வழிகோலப் போவதில்லை. மாறாக ஓர் நீண்ட கால யுத்தத்துக்கே வழிவகுத்துள்ளது.

இந்த அரசியல் யோசனைகள் இராணுவத் தீர்வை நியாயப்படுத்துவதற்காகப் போடப்பட்ட ஓர் ஏமாற்று முகமூடியே தவிர வேறு எதுவும் அல்ல.

ஸ்ரீலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கென வெளியிட்டுள்ள யோசனைகள் குறித்த விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு விவரித்தார்.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை விளக்கும் வகையில் அவர் நேற்றிரவு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அப்போதே மேற்கண்டவாறு சொன்னார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் தெரிவித்ததாவது:-

பிரதேச ரீதியாக அதிகாரப் பரவலாக்கம் வழங்கும் யோசனைகளைக் கொண்ட உத்தேச திட்டம் ஒன்றை சந்திரிகா அரசு வெளியிட்டுள்ளது.

இந்த யோசனைகள் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ்மக்களுக்கோ அல்லது அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் விடுதலைப் புலிகளுக்கோ முன்வைக்கப்படவில்லை.

இந் நிலையில் — இந்த யோசனைகளின் தகைமை பற்றியோ, அவற்றின் சாதக பாதக அம்சங்கள் பற்றியோ நாம் கருத்துத் தெரிவிப்பதில் அர்த்தமில்லை.

ஆயினும் இந்த அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் இப்போது ஏன் அறிவிக்கப்பட்டிருக்கின்றன

இது குறித்து அரசாங்கம் பிரமாதமான முறையில் ஏன் பிரசாரம் செய்து வருகிறது?

இந்த அறிவிப்பின் அந்தரங்க நோக்கங்கள் எவை என்பது பற்றி எமது மக்க

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் மூவருக்கும் காயம்

கொழும்பில் மேல் மாகாண முதலமைச்சரின் அலுவலகக் கட்டடத்துக்கு முன்பாக இடம்பெற்ற குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களில் மூவர் தமிழர்களாவர்.

ஈஸ்வரன், ரஞ்சனி ஈஸ்வரன், மகேஸ்வரன் ஆகிய தமிழர்களே காயமடைந்தவர்களாவர். (ஐ)

## கப்பல் பிரச்சினையில் அரசு இழுத்தடிக்கிறது

யாழ்ப்பாணம், ஓக. 12

உணவுக் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விடயத்தில் நாம் உத்தரவாதம் வழங்கி விட்டோம். ஆனால் அரசு இந்தப் பிரச்சினையை இழுத்தடித்து வேண்டுமென்றே உடன்பாடு ஏற்படுத்துவதை தாமதப்படுத்தி வருகிறது.

விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று மாலை நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நாங்கள் உத்தரவாதம் கொடுக்க தயாராகவுள்ளோம்.

ஆனால் அரசாங்கத்தின்— கடற்படையின் — கட்டுப்பாட்டில் இருக்கும் துறைமுகங்களுக்குள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுக்க முடியாது

இதை நாம் நீண்ட காலமாக தெரிவித்துள்ளோம்.

கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் கப்பல்களுக்கு நாம் பாதுகாப்பு வழங்க முடியாது. அவர்கள்தான் பாதுகாப்பு கொடுக்கவேண்டும்.

எமது கட்டுப்பாட்டில் உள்ள கடற்பகுதியில் பாதுகாப்பு கொடுக்க தயாராகவுள்ளோம், இதை நாம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கு தெரிவித்துள்ளோம்.

உடன்பாடு ஒன்றைக்காண அவர்கள் முயல்கிறார்கள் — என்றார். (இ-3)

## தமிழ்க் குழுக்களுக்கே தீர்வுத் திட்டம் எமக்கு வைக்கப்பட்டது ராணுவ திட்டம்

### சர்வதேச உலகம் எமது பிரச்சினையை ஆராயவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 12

நாடாளுமன்றத்தில் அரசுக்கு பலம் போதாது — தமிழ்க் குழுக்களின் ஆதரவோடு நாடாளுமன்றத்தை கொண்டு செல்வதற்கு தமிழ்க் குழுக்களை தமது கைகளில் வைப்பதற்காகவே இந்தத் தீர்வுத் திட்டம்.

அதேபோல புலிகளுக்கும் ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். அது தான் இராணுவத் தீர்வுத் திட்டம்.

ஆகவே நாம் இன்று அரசின் இராணுவத் திட்டத்தை எதிர்கொள்வது பற்றியே யோசிக்கின்றோம்.

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளிக்கையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

எமக்கு வைக்கப்படாத அரசியல் தீர்வுத் திட்டம் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை.

சர்வதேச உலகம் எமது பிரச்சினையை பற்றி ஆராயாது தீர்வுத் திட்டம் பற்றி அபிப்பிராயம் கூறுகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்புத்தான் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பாகும்.

ஆகவே விடுதலைப் புலிகளை ஓரம் கட்டி விட்டு —

விடுதலைப்புலிகளை ஒதுக்கி விட்டு — எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் முன் எடுக்க முடியாது இந்த யதார்த்த உண்மையை வெளி உலகம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதைச் செய்யாமல் தீர்வுத் திட்டத்தை வரவேற்பதில் அர்த்தமில்லை. அதையிட்டு நாம் பெரிதாக அக்கறைப்பட

(5 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரியின் புலனாய்வுப் போரை முறியடிக்க உதவுக

யாழ்ப்பாணம், ஓக. 12

காட்டிக் கொடுப்புக்கள், சதிகள், நாசவேலைகள் என்ற பரிமாணங்களில் எமது தேசம் மீது எதிரி அரசுகள் பெரும் புலனாய்வுப் போரை நடத்த முயற்சிக்கின்றன

இவற்றைத் தடுத்து நிறுத்த ஒத்துழைக்குமாறு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தேசத்தின் இரகசியங்களை உயிரிலும் மேலானதாகக் கருதிப் பாதுகாக்குமாறும் —

ஏதாவது சந்தேகம் எழுந்தால் அல்லது ஏதாவது தகவல்கள் கிடைத்தால் உடனடியாகவே செய்தித் தகவல் மையங்களுக்கு அறிவிக்குமாறும் பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக செய்தித் தகவல் மையம் வெளியிட்டுள்ள விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இவை விடியலுக்கு முந்திய நாட்கள். போர் மூலம் புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்ற உண்மையை சிங்கள தேசமும், அந்நிய தேசங்களும் புரிந்து கொண்டிருக்கும் காலம். எனவே உலக விடுதலைப் போராட்டங்கள் எல்லாம் சந்தித்தது போல, சூழ்ச்சிகர வழிமுறைகள் மூலம் எமது போராட்டத்தையும் அழிக்க எதிரிகள் முயல்கின்றனர்.

மறைமுக வழிகளைக் கைக்கொண்டு, இரகசியமான

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசு மீண்டும் தலையிடும் என நாங்கள் நினைக்கவில்லை

"இந்திய அரசாங்கம் மீண்டும் இந்தப் போராட்டத்தில் தலையிடும் என்று நாங்கள் நினைக்கவில்லை. மீண்டும் இந்தியா இராணுவ ரீதியாக ஸ்ரீலங்காவுக்கு உதவி செய்யும் எனவும் நாம்எதிர்பார்க்கவில்லை''.

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில், 'இலங்கைத் தமிழர் தீர்வு விடயத்தில் இந்தியா இராணுவ ரீதியாக ஸ்ரீலங்கா அரசுக்கு உதவும்என நினைக்கின்றீர்களா? என்று செய்தியாளர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்காவுக்கு இராணுவ ரீதியாக உதவும் அரசியல் புறநிலைகள் இந்தியாவில் இல்லை.

இப்போது நிலைமை மாறிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் புலிகளுக்கும் — தமிழ் மக்கள் இன்னல் படும் நிலைக்கும் ஆதரவாக ஓர் எழுச்சி இப்போது உருவாகியுள்ளது.

இந்த நேரத்தில் புலிகளை அழிப்பதாகக் கூறுவதன் கோட்பாடு, தமிழ் மக்களை அழிப்பது தான் என்பது அங்கு உணரப்பட்டுள்ளது.

ஆகவே மக்களை அழிக்க மீண்டும் இந்திய இராணுவம் வராது என நம்புகிறோம் என்றார். (இ-3)

## யாழ் வணிகர் கழகம் விடுக்கும்
# முக்கிய அறிவித்தல்

சென்ற மாத முற்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளால் வலி. வடக்கு, வலிமேற்குப் பகுதிகளில் மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்து இப்பகுதிகளில் தங்கியிருந்ததால் அவர்கள் உடனடி தேவைகள் நலன் கருதி தற்காலிகமாக சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் எமது எல்லைக்குட்பட்ட கடைகளை திறக்க அனுமதிக்கப்பட்டிருந்தது.

இன்று (12-08-1995) தொடக்கம் வழமை போல் சனி மாலை, ஞாயிற்றுக்கிழமைகள் வர்த்தக விடுமுறையாக இருக்கும். இதனை மீறுமிடத்தில் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு எமது கழகம் எவ்விதத்திலும் உதவக்கூடியதொன்றல்ல என்பதையும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறோம்.

எதிர்வரும் (24 - 08 - 1995) வியாழக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு எமது கழக எல்லைக்குட்பட்ட வர்த்தக விடுமுறை தினமாகும்.

— யாழ். வணிகர் கழகம்.

(சி-2048)



## வெஸ்லி அக்கடமி
சாவகச்சேரி

கணித பாடத்தில் சித்தி எய்த ஒரு அரிய வாய்ப்பு
O/L SPECIAL MATHS BACH — II

ஆசிரியர் — தே. ஜெயசீலன்
ஆரம்பம் — செவ்வாய்க்கிழமை (15—08-95)

★ கிழமையில் 12 மணித்தியாலப்படி, 12 கிழமைகளில் முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்
★ பாடசாலை, மாணவர்களுக்கு அனுமதி இல்லை
★ தனிப்பட்ட முறையிலான வகுப்புகளுக்கு காரியாலயத்தில் தொடர்பு கொள்க
★ அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

— நிர்வாகி

(37990)






## UNIKCO COMPUTER CENTRE
## புதிய பிரிவுகள்

★ BASIC ★ PASCAL ★ LOTUS 1-2-3
★ D BASE III PLUS ★ WORD STAR

ஆரம்பம்:
18 – 08 – 95 வார நாள் வகுப்புகள்
19 – 08 – 95 வார இறுதி வகுப்புகள்

★ மேலும் 31-08-1995 வியாழக்கிழமை 2-5 மணி வரை Dos வகுப்புகள் இலவசமாக நடத்தப்படும்.
★ Printing: தமிழ், ஆங்கிலம் செய்து கொடுக்கப்படும்.
★ Computer திருத்தி கொடுக்கப்படும்.
★ Computer விற்பனைக்கு உண்டு.

மேலதிக விவரங்களுக்கு:
37, Clock Tower Road, Jaffna.
60, Vidanes Road, Chundikuli.

[சி-2045]



## ஆண்டு 5 புலமைப்பரிசில்

பரீட்சைக்கான
விசேட பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.
அடுத்த பயிற்சிப் பரீட்சை
13 – 08 – 1995 27 – 08 – 1995

**BOND**
யாழ்ப்பாணம்.

[8633]


## புலிகளின் குரல் வானொலியில்

**12 – 08 – 1995**
**சனி இரவு**

★ 8-02 — புரட்சிக்குரல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கவியரங்கம்— "நீலக்கடலிடையே பொழிந்த நெருப்பு மழை"

**13 – 08 – 1995**
**ஞாயிறு காலை**

★ 7-02— மாவீரர்வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**சனி மாலை**

★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடி வினா
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — பாமாலை

## வர்த்தமானியில் பார்க்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 12

அரசாங்க மாகாண பொது எழுதுநர் சேவையின் இரண்டாம் வகுப்பு 'அ' பிரிவுக்கு சேவையில் உள்ளோரை நியமிப்பதற்கான பரீட்சைக்கு தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நவம்பர் மாதம் 25 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 25 ஆம் திகதியாகும்.

விண்ணப்பம் தொடர்பான விவரங்கள் 21 - 07 - 95 அன்று வெளியான வர்த்தமானியில் வெளியாகியுள்ளன.

பிரஸ்தாப வர்த்தமானி அறிவித்தலின் நிழற்படப் பிரதியை யாழ். விக்டோறியா வீதியிலுள்ள யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இன்று முதல் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## 40 ஆவது அகவை விழா

யாழ்ப்பாணம், ஓக. 12

கைதடி தெற்கு சனசமூக நலனோம்பு மூலவள நிலையத்தின் 40 ஆவது அகவை விழா இன்று சனிக்கிழமை காலை 7-00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இரவு 7-00 மணிக்கு மின்னொளியில் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியும் நடைபெறும். (இ)

## சுகவீனமே காரணமாம்

புதுடில்லி, ஓக. 12

பிரதமர் பி. வி. நரசிம்ம ராவ் தமிழகத்துக்கு நேற்று மேற்கொள்ள விருந்த விஜயத்தை உடல் நலக் குறைவு காரணமாகவே ரத்துச் செய்துள்ளார் என்று புதுடில்லியில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்திரா காங்கிரஸுக்கும், அ. தி. மு. க. வுக்கும் இடையே கூட்டணி அமைக்கும் நோக்கில் பிரதமரின் நேற்றைய தமிழக விஜயம் எதிர்பார்க்கப்பட்டது. (இ-ஐ)

## கொழும்பு குண்டு வெடிப்பு:
# இளநீர் வியாபாரியும் வவுனியா வாலிபரும் கைது!

கொழும்பு, ஓக. 12

மேல்மாகாண சபை முதலமைச்சரின் அலுவலக கட்டடத்துக்கு முன்பாக இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக வெள்ளவத்தையில் உள்ள இளநீர் வியாபாரியான இராமையா என்பவரையும், வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரையும் இரகசியப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளநீர் வியாபாரி அந்த இளைஞருக்கு தங்க இடம் கொடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## லக்கி கல்வி நிலையம்
அளவெட்டி - சுன்னாகம்

எமது கல்வி நிலையத்தின் வகுப்புகள் யாவும் 14-8-95 திங்கட்கிழமை மாலை 3.00 மணி முதல்
**கே. கே. எஸ். வீதி, இணுவில்**
[நியூ லங்காபாம் அருகில்]
என்னும் முகவரியில் ஆரம்பமாகும் என்பதை எமது மாணவர்களுக்கு அறியத் தருகின்றேன்.

(37996) நிர்வாகி



## இரசாயனவியற் கலந்துரையாடல்

இடம்: யாழ். மத்திய கல்லூரி
காலம்: 14 — 08 — 1995
திங்கட்கிழமை காலை 9-00 மணி

G.C.E.(A/L) 1995 பரீட்சைவினாக்கள் தொடபான வழமையான கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு இரசாயன ஆசிரியர்களை கேட்டுக்கொள்கிறோம்.

இணைச் செயலாளர்கள்
யாழ். இரசாயன ஆசிரியர் கழகம்

[8632]



உ
தாவடி
அம்பலவாண கந்தசுவாமி கோவில்
## இளம் தொண்டர் சபையினர்
வழங்கும்
# பூங்காவன நிகழ்வு

இன்று 12 — 08 — 1995 மாலை 7-00 மணிக்கு ஈழத்து புகழ் பெற்ற நாதஸ்வர தவில் வித்துவான்கள் கலந்து கொள்ளும் கச்சேரி

| நாதஸ்வரம் | தனித்தவில் |
| --- | --- |
| சிதம்பரநாதன் | புண்ணியமூர்த்தி |
| பாலகிருஷ்ணன் | நித்தியானந்தம் |
| ரவி ரஜீவ் குழுவினர் | |

தொடர்ந்து சின்னமணி வில்லிசைக் குழுவினர் வழங்கும்
**'அருணகிரிநாதர்'**
வில்லிசை நிகழ்வு இடம்பெறும்

முருகப் பெருமான் அடியார்கள் அனைவரையும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

– இளம் தொண்டர் சபையினர்.

அன்பளிப்பு:
**கே.கே. இராசரத்தினம் நகைமாடம்**
277, சந்தோசம் வீதி, யாழ்ப்பாணம்.

[37991]



## கண்ணீர் அஞ்சலி

## திருமதி மகேஸ்வரி இரத்தினம்

எமது நிறுவன ஆசிரியர்
திரு. இ. நித்தியானந்தன் அவர்களது
தாயாரின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிலையம்

(88001)

## கொப்பேகடுவவின் திட்டத்துக்கு புத்துயிர்!

# குடாநாட்டை கைப்பற்றும் திட்டம்

# அமெ. உதவியுடன் உருவானதாம்

கொழுப்பு, ஓக. 12
வடபிராந்திய தளபதியாக இருந்த அராலி கண்ணிவெடியில் கொல்லப்பட்ட டென்ஸில் கொப்பேகடுவவினால் தயாரிக்கப்பட்ட திட்டமே தற்போது அமெரிக்க இராணுவ நிபுணர்களால் செழுமைப்படுத்தப்பட்டு யாழ். குடாநாட்டைக் கைப்பற்ற அரசு நடைமுறைப்படுத்தும் இராணுவத் திட்டம் ஆகும். ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவத் தாக்குதலும் அதன் ஓர் அங்கமே என்றும் தெரிகிறது.

மேற்கண்ட தகவலை கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று தெரிவிக்கிறது.

அந்த வார இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் குமுது குஷபம் குமார என்பவர் எழுதியுள்ள ஆய்விலே மேற்கண்ட இரகசியத் திட்டம் பற்றி பிரஸ்தாபித்துள்ளார்.

அவர் மேலும் எழுதியுள்ளதாவது;

இந்த அரசாங்கத்தின் யுத்தத்திற்கான இரகசியத் திட்டம் எது என்பது பற்றிய தகவல்களும் எமக்குக் கிடைத்திருக்கின்றன.

இத்திட்டம் முன்னர் கொப்பேகடுவவால் தயாரிக்கப்பட்ட திட்டமே என்றும்—

அது சில அமெரிக்க இராணுவ நிபுணர்களால் மேலும் செழுமைப்படுத்தப்பட்டிருப்பதாகவும்—

இதனாலேயே அரசாங்க உயர்மட்டம் இத் திட்டத்தை யிட்டு பெருமளவு நம்பிக்கை கொண்டிருப்பதாகவும்—தெரியவருகிறது.

இந்த உயர்மட்டத்தின் செயற்பாடுகள் ஸேர்வன்டெஸ்என்னும் புகழ் பெற்ற ஸ்பானிய எழுத்தாளரின் டொன்கிஹோட்டே என்ற பாத்திரத்தின் தன்மைகளைக் கொண்டவை என்பதை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும்.

டொன்கிஹோட்டே—குதிரை ஏறிச் சென்று காற்றாடிகளுடன் சண்டைபிடித்த ஆசாமி.

கொப்பேகடுவவின் திட்டத்தின்படி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதானால் மொத்தமாக 5ஆயிரம் பேரைப் பலிகொள்ள வேண்டியிருக்கும்

இத்தொகை மிகவும் குறைவானது என்றும்—

இவ்வாறான யுத்தத்தில் குறைந்தபட்சம் 30ஆயிரம் பேராவது கொல்லப்படுவார்கள் என்று இப்போது அரச தரப்பு உள் வட்டாரங்களில் பேசப்படுகிறது—என்றும் அந்த தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-3)

## 65 பயணிகள் பலி

சன்சல்வடோர், ஓக. 12
கௌதமாலா நாட்டின் பயணிகள் விமானம் ஒன்று கடும் புயலில் சிக்கியதால் ஏற்பட்ட விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 65 பேரும் உயிரிழந்தனர்.

மத்திய எல்சல்வடோர் எரிமலைப் பகுதியில் இவ் விபத்து இடம்பெற்றது.

(எ-ஐ)

# கொழும்பில் குண்டுகள் வெடிக்கும்!

# நேற்றைய பத்திரிகைகளில் செய்தி

### சிங்கள மக்கள் மத்தியில் பீதி; பதற்றம்

கொழும்பு, ஓக. 12
கொழும்பில் வெடிமருந்துக் குதம் ஒன்றை நிலத்துக்கு அடியில் விடுதலைப் புலிகள் வைத்திருப்பதாக ''தினமின'' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது போன்ற பல செய்திகளை நேற்றைய கொழும்பு சிங்களப் பத்திரிகைகள் பலவும் தமது தலைப்புச் செய்திகளாக வெளியிட்டுள்ளன. இதனால் சிங்கள மக்கள் மத்தியில் பீதியும் பதற்றமும் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

குண்டு பொருத்தப்பட்ட வாகனம் ஒன்று கொழும்புக்குள் பிரவேசித்திருப்பதாகவும் முன் பக்கத்தில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

பதினொரு பேரைக் கொண்ட புலிகளின் அணியினர் கொழும்பில் நடமாடுவதாகவும் அவர்களில் ஐவர் பெண்கள் என்றும் 'தினமின' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''கொழும்பில் மேலும் குண்டுகள்'' என்ற தலைப்புச் செய்தியை ''திவயின'' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

கொழும்பில் வெவ்வேறு இடங்களில் வெடிக்க வைப்பதற்காக மேலும் நான்கு குண்டுகள் நகருக்குள் விடுதலைப் புலிகளால் எடுத்து வரப்பட்டிருப்பதாக பொலீஸார் சந்தேகிக்கின்றனர் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டு பொருத்தப்பட்ட வாகனம் ஒன்றைக் கைப்பற்றுவதற்காக கொழும்பு முழுவதும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ''லங்காதீப'' பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

(ஒ-ஐ-எ)

### கிரனேட்டுகளை வெடிக்கச் செய்து

## கிழக்கில் பொது மக்களை துன்புறுத்தும் படையினர்

யாழ்ப்பாணம்,ஓக. 12
கிழக்கில் தாங்களாகவே கிரனேட்டுகளை வெடிக்க வைக்கும் படையினர் பின்னர் விடுதலைப் புலிகளே அவற்றைச் செய்தாகக் கூறி பொது மக்களைத் துன்புறுத்தி வரும் சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் இச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

குடியிருப்புகளுக்கு அருகே கிரனேட்டுகளை வெடிக்க வைத்து விட்டு பின்னர் அக்குடியிருப்பைச் சுற்றிவளைத்து படையினர் மக்களை துன்புறுத்தி வருவதாக அங்கிருந்து கிடைக்கும்செய்திகள் தெரிவிக்கின்றன.

[ஐ]

### தமிழக மீனவர் மீதான குண்டு தாக்கு

## இலங்கை அரசை எச்சரித்து விளக்கம் கோர வற்புறுத்து

புதுடில்லி, ஓக. 12
இலங்கை விமானப்படை ஹெலிக்கொப்டரின் தாக்குதலில் தமிழக மீனவர்கள் ஐவர் உயிரிழந்தது தொடர்பாக மத்திய அரசு இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்து விளக்கம் கோர வேண்டும்

இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி மத்திய அரசைக் கேட்டுள்ளார்

அண்மையில் இராமேஸ்வரம் அருகே கோடிக்கரையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர் மீது, இலங்கைக் கடற்படையின் ஹெலிக்கொப்டர் ஒன்று குண்டு வீசி தாக்கியதில் 5 மீனவர்கள் உயிரிழந்தது தெரிந்ததே.

இதனை அடுத்து தமிழகக் கரையோர மீன்பிடிக் கிராமங்களில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பலரும் தமது கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோரும் தமது விசனத்தை தெரிவித்திருந்தனர்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறுவதால், மத்திய அரசு உடனடியாக இவ்விடயத்தில் தலையிட வேண்டும் என்றும் —

இது பற்றி இந்திய அரசின் கண்டனத்தையும், எச்சரிக்கையும் இலங்கை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் — இவர்கள் வற்புறுத்தியிருந்தனர்.

(எ-ஐ)

## கரவெட்டி பரலோகமாதா ஆலயத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 12
கரவெட்டி பரலோகமாதா ஆலய திருநாளில் நாளை ஞாயிற்றுக்கிழமை பங்குத் திருச்சபைத் தின வழிபாடுகள் நடைபெறும்.

அன்றைய வழிபாடுகளில் யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து சிறப்பிப்பார்.

ஆலயத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கு அவர் முதல் நன்மை அளிப்பார்.

(எ)

## ராமகிருஷ்ண மிஷன் அகதிகளுக்கு அன்பளிப்பு

போரினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவும் பொருட்டு கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தலைவர் தவத்திரு சுவாமி ஆத்மகணானந்தர் மகராஜ் அன்பளிப்பாக உடுபுடைவைகளை அனுப்பிவைத்துள்ளார்.

சமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான இந்தப் புதிய உடுபுடைவைகள் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன.

அவற்றை சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைத்தார்.

[அ-173]

## ரூ.41 ஆயிரம் யுத்த செலவு

குளியாப்பிட்டி, ஓக. 12
இன்று இலங்கையில் நடைபெறும் யுத்தத்தில் அரசாங்கம் ஒவ்வொரு நிமிடமும் 41 ஆயிரம் ரூபாவை செலவழித்துக் கொண்டிருக்கிறது.

தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர குளியாப்பிட்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இவ்வாறு கூறினார்.

### யாழ். மாவட்டத்தில்

## ஆசிரியர் நலன்புரி திட்டம் மக்கள் வங்கி அறிமுகம்

யாழ்ப்பாணம், ஓக. 12
ஆசிரியர்கள் பலவேறு தேவைகளுக்கு கடன் பெறும் வகையிலான ஆசிரியர் நலன்புரிதிட்டம் ஒன்று அடுத்த மாதம் முதல் மக்கள் வங்கியால் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்பட இருக்கிறது.

ஆசிரியர்களுக்கு சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடனும்—

ஆசிரியர்களின் வீடு மற்றும் சுயமுயற்சி போன்ற தேவைகளுக்கு கடன் வழங்கும் நோக்குடனும்— மக்கள் வங்கி ''ஆசிரியர் நலன்புரி திட்டம்'' ஒன்றை ஏற்கனவே அறிமுகம் செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இந்தத் திட்டம் அடுத்த மாதம் முதல் — பாடசாலை விடுமுறை முடிவடைந்ததும்— அமுல் செய்யப்பட இருப்பதாக மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. இ. அருளானந்தன் தெரிவித்தார்.

பாடசாலைகள் மீளத்திறக்கப்பட்டதும் பாடசாலைகளில் இத்திட்டம் பற்றி ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கப்பட இருக்கிறது.

(ஓ-3)

## நல்லூர் சூழலில் இன்று

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் பன்னிரண்டாம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணிமண்டப முன்றலில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை சாந்த சொரூபி - முத்துச்சாமி பாட்டு.

7 மணிமுதல் 8-30 மணி வரை திரு. எம். ஸ்ரீரங்கநாதன் பாட்டு.

★ நல்லை ஆதீன குருமுகூர்த்த ஆலயத்தில்—

பி. ப. 3 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப் பேருரை - கந்தரனுபூதி.

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் —

மாலை 5-30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மாவின் ''விஷ்ணு பாகவதம்'' தொடர் இசைப் பேருரையில் ''வாமனாவதாரம்''

[எ-30-111]

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

### காத்திட வா வா வேலா!

நல்லையில் கோயில் கொண்டவனே - நாம்
நிதம்படும் துயரினை அறியாயோ
எல்லையிலா அருட் கடலான - முத்துக்
குமரனே சரவண பவனேவா
அல்லலுற்று அகதியாய் அலைகின்றோம்-வேண்டும்
ஆறுதல் அளித்திட வா பகையை
வெல்லும் வேலுடைத் தெய்வமே - எங்களது
வாழ்வினைக் காத்திட வாவாவா!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

### வேலை நம்பி வந்தோமையா!

நல்ல வழி காட்டிடையா நல்லூரானே
நாடி உன்னை நம்பி நின்றோம் நல்லூரானே
சூரனைச் சமரில் வென்ற நல்லூரானே
எங்கள் சமர் தீர்ப்பதெப்போ நல்லூரானே
பட்ட துயர் போதுமையா நல்லூரானே
கடைக்கண்ணைக் காட்டிடுவாய் நல்லூரானே
வேலை நம்பி வந்தோமையா நல்லூரானே
தமிழன் ஓங்கி நிதம் வாழவென்று நல்லூரானே
பாரில் ஒளி வீசிடவே நல்லூரானே
எங்கள் ஈழமதைக் காத்திடுவாய் நல்லூரானே

— நயினை விஜயன்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

குறைந்த விலையில் தேவையான அளவு இரண்டாம் தரத் தேங்காய்ப் பிண்ணாக்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: K. வீரசிங்கம். முருகன் எண்ணெய் ஆலை, மருதடி மேற்கு, சாவகச்சேரி. [37966]

German Shepherd நாய்க் குட்டிகள் (புளுக்கள் அகற்றப்பட்டவை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 38/1, 5ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [37969]

தூய சனடச் சணல் (Pure Breed Sanaan) மறி ஆடும், ஆறு மாத வயதுடைய சனடச் சணல் கடாக்குட்டியும் விற்பனைக்குண்டு. தி. வரதராஜன் காவல் துறை அருகில், கோப்பாய் வடக்கு, கோப்பாய். (37915)

வீட்டு மரங்கள், சிலாகை, ஓடு, வீட்டு தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு: தான்சன் கல்வி நிலையம், மருதனார்மடம். (37988)

லைக்கோக் 13 கட்டு 4,250/-, வயலின் சிறியது 2500/-, தாரா 1 சோடி 500/- விற்பனைக்கு உண்டு. மாலை 2.00 மணிக்கு பின்பு விசுந்தராசா கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. (37979)

அழகிய 1½ வயதுடைய சுத்த கறுப்பு பொமிரேனியன் பெண் நாயும் பூச்சி அகற்றப்பட்ட கறுப்பு பொமிரேனியன் 2½ மாத ஆண் குட்டியும் விற்பனைக்கு உண்டு சி.சிவா, இல 22, செம்மணி வீதி, முத்திரைச் சந்தை, கிட்டு பூங்கா அருகில் நல்லூர். (37989)

## எரு விற்பனைக்கு

மாட்டெரு விற்பனைக்குண்டு. 15-08-95ஆம் திகதிக்குமுன் கீழ்க்காண் விலாசத்தில் பார்வையிட்டு கூறுவிலையை சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ. து), திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய். (சி-2044)

## திருமண சேவை

37 வயது, விசாகம், செவ்வாய் 12, என்ஜினியருக்கு படித்த மணமகள் தேவை. எம்மிடம் சகல தொழில்களில் மணமக்கள் உண்டு. துர்க்கா திருமணசேவை, மல்லாகம், தற்போதைய முகவரி:- இல. 178, பிறவுண் வீதிச்சந்தி, நாவலர் வீதி, (பசுமை வேளாண்மைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (37981)

## மணப்பெண்கள் தேவை

கத்தோலிக்க 29 வயது, அரசாங்க உத்தியோகத்தருக்கும் குற்றமற்ற 36, 33 வயது டாக்டருக்கும், கனடாவால் வந்த 29, 38 வயதானவர்களுக்கும், 28 வயது வியாபாரிக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (37968)

## பற்றரி சார்ஜ்

சகலவித மின்னேற்றக் கலன்களை (Rechargable-Batteries) விஞ்ஞான முறையில் மின்னேற்றம் செய்து கொடுப்பதில் 18 வருட அனுபவமிக்கவர்கள், வானொலிக் கருவிகளை திருத்தி குறித்த தவணையில் தர தொடர்பு ஏற்படுத்தவும். சக்தி தொழிலகம், இல. 15, விக்ரோறியா வீதி, [யாழ். ஆஸ்பத்திரி பின் வீதி], யாழ்ப்பாணம். (37985)

## தவறிவிட்டது

சி. கந்தசாமி ஆகிய எனது அடையாள அட்டையும், அலுவலக அடையாள அட்டையும், திருமதி கந்தசாமியின் அடையாள அட்டையும் யாழ். நகரில் தவறிவிட்டன. அவசர அலுவல் காரணமாக கொழும்பு செல்ல இருப்பதால் தயவு செய்து கண்டெடுத்தவர்கள் இல. 111, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (37972)

## உயர்தர விலங்கியல்

உயர்தர விலங்கியல் A/L மாதிரி வினாத்தாள் - 10 M.C.Q. மட்டும் 10 மாதிரி கட்டமைப்பு, கட்டுரை வரை. வினாக்களும் விடைகளும் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-2000]

## SPECIAL ANTENNA

To view Rupavahini Madras, Programmes Fixing Special T. V. Antenna, Repairing Antennas, Radios T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road [Ariyakulam Junction], Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. [சி-1976]

## வெளிவந்துவிட்டது

G.C.E (A/L) 95 வர்த்தக மாணவர்களுக்கு உரிய நடைமுறை விடயங்கள் வெளிவந்துவிட்டன. ஆசிரியர்கள் திரு க. தேவராஜா, திரு.இ. இரட்ணம். வெலிங்டன் சந்திக்கு அருகில் அறிவகம் புத்தகசாலையிலும், C.C.A. யிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-2038)

## சீயாக்காய்ப் பவுடர்

இப்போது காவேரி சீயாக்காய்ப் பவுடரில் கருசலாங்கண்ணி என்னும் மூலிகை சேர்த்துத் தயாரிக்கப்படுவதால் உங்கள் கூந்தல் கருமை நிறமாகவும் நீண்டு வளரக் கூடியதாகவும் உதவுகிறது. சீயாக்காய் பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள். (37851)

## வைபவ மாலை

யாழ்ப்பாண வைபவ மாலை ஆக்கம்: முதலியார் குல. சபாநாதன் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் விலை 50/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு எமது ஸ்தாபனம் நல்லூர் சிவன்கோயில் அருகில் திறக்கப்பட்டுள்ளது. [சி-2036]

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் பொன்னம்பலம் நடராசா

[முன்னாள் அதிபர், நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்]

தோற்றம்: 12 — 12 — 1925

மறைவு: 12 — 08 — 1994

ஆசை ஐயாவே! அன்பின் திருவுருவே! மெய் வருந்தி எல்லோர் மேன்மைக்காகப் பாடுபட்டீர் செய் கருமம் சிரக்கிச் சிறப்புகள் பல பெற்றீர்கள். எம்மையெல்லாம் கலங்கவைத்து இடைவழியில் எங்கு சென்றீர்கள் நெஞ்சமெல்லாம் உம் நினைவை நிறைவாக்கிக் கொள்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"அறிவகம்",
பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். [37916]

# ஒத்துமாறல்

கண்டி மாவட்டத்தில் பணிபுரியும் ஆங்கில ஆசிரியை ஒருவர் யாழ். மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். ஒத்துமாற விரும்புவர்கள் விண்ணப்பிக்கவும்.

இல:- 823
மே/பா, உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(37987)

# O\L மீட்டல் வகுப்புகள்

## ஆரம்பம்: இன்று 12 - 08 - 1995

O/L பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள் [எல்லாப் பாடங்களும் - விடைகளுடன்] எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**BOND**, யாழ்ப்பாணம். [8634]

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 04 — 04 — 1940



உதிர்வு: 13 — 07 — 1995

அமரர்
## இராசையா சிவபாதசுந்தரம்
(Brown & Root, Bahrain)

பல்லாயிரம் மைல் கடந்து
எங்கள் வாழ்வுக்கு ஒளிதந்த ஆதவனே!
தன்னலம் கருதாது
உடன் பிறப்பின் உயர்விற்கு
உயிர் தந்த நாயகனே!
காலனின் சதியால்
மாதமொன்று மறைந்திட்ட போதும்
எம் நினைவினில் நிறைந்து நிற்கும் திரு உருவே.

பிரிவால் துயருறும்;
தாய், சகோதரர், மைத்துனர்.

59, குமாரசாமி வீதி,
யாழ்ப்பாணம். (37986)

# 6ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர் பூத்தது: 15 — 05 — 1933



மலர் வாடியது: 13 — 08 — 1989

## இமெல்டா பொன்றோஸ் டோமினிக்

உன்னைப் போல் ஒரு தாயைக் கண்டதில்லை
உன் அன்பில் நாம் அடைந்த இன்பம் கொள்ளை
உனை இழந்து நாம் தவித்தோம் ஆறாண்டாக
அன்னையே வாராயோ மீண்டெமக்காக

இவரின் ஆன்ம சாந்திக்காக 13 - 08 - 95 காலை 6-15 மணிக்கு கிறீஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவுத் துயரால் வாடும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

32, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். [37853]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அரசின் கூர் ஆயுதம்

வடக்கு-கிழக்கு மீது அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடையின் கீழ், வடக்குக்கு கொண்டு வருவதற்குத் தடை விதிக்கப்பட்ட பொருள்களின் எண்ணிக்கையே அதிகம். மொத்தம் 31 பொருள்கள் மீது தடை விதிக்கும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி சந்திரிகா கடந்த மே மாதம் 25 ஆம் திகதி வெளியிட்டிருந்தார்.

ஆனால் உத்தியோகபூர்வமாகத் தடை விதிக்கப்படாத பெரும் எண்ணிக்கையான பொருள்களை இங்கே கொண்டு வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்குவதில்லை. பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கும் பொருள்களைக் கூட இராணுவ அதிகாரிகள் தமது தீர்மானத்தின் பிரகாரம் தடுத்துவிடுகிறார்கள்.

தமிழ்ப் பகுதிக்குக் கொண்டு வரப்படும் பாவனைப் பொருள்கள் இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் தடை விதிக்கப்படுவதை எவரும் கேட்க முடியாது. இது விடயத்தில் இராணுவத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா திறந்த "லைசென்ஸ்" வழங்கி விட்டார்.

வடக்கே தான் இந்த நிலைமை என்றால், கிழக்கிலும் இந்த வியாதி தொற்றியிருக்கிறது. பரவி வருகிறது. மேலே குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கிழக்கே எடுத்துச் செல்ல இரண்டு பொருள்களுக்கு மட்டுமே தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் கிழக்கில் உணவுப் பொருள்களையும் ஏனைய பாவனைப் பொருள்களையும் எடுத்துச் செல்வதற்கு கட்டுப்பாடுகளை மட்டுமன்றி தடைகளையும் விதித்து வருகிறார்கள் இராணுவத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பிரதேசத்தில் இராணுவம் விதித்த பொருளாதாரத் தடையால் அப்பகுதி மக்கள் பட்டினியை எதிர்நோக்குகிறார்கள் என்ற தகவல்கள் இருவாரங்களுக்கு முன் வந்தன.

இப்போது திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்தில் உள்ள இருபத்து நான்கு தமிழ்க் கிராமங்கள் மீது இராணுவத்தினர் பொருளாதார, போக்குவரத்துத் தடைகளை விதித்துள்ளனர்.

வாகரை மக்கள் தாமரைக் கிழங்கை உண்டு நாட்களைக் கழிப்பது போல, மூதூர் மக்களும் பட்டினி கிடக்கிறார்கள்.

தமிழர்களை அவர்கள் எங்கிருந்தாலும், என்னென்ன வழிகளில் அழிக்கலாமோ, அவ்வழிகளில் அழித்துவிட வேண்டும் என்பதில் அரசு எவ்வளவு அக்கறையாக உள்ளது என்பதற்கு இதுவும் மற்றோர் அத்தாட்சியாகும்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு அவர்களைப் பட்டினி போடுவதனையும் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதில் அரசு இப்போது தீவிரமாகச் செயற்படுகிறது. அதனைக் கூராக்கி வருகிறது.

சந்திரிகா அரசுக்கு ஆதரவு வழங்கும் வெளிநாடுகள் இது குறித்துக் கவனத்தில் எடுப்பது எப்போது?

# அரசின் யோசனை:ராணுவ தீர்வை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ளுக்கு எடுத்து விளக்குவது முக்கியமானது எனக் கருதுகிறோம்.

சமாதான வழிகள் மூலமாக — சமரசப் பேச்சுக்கள் வாயிலாக — ஓர் அரசியல் தீர்வைக் காணும் நோக்கத்துடன் அரசாங்கம் இந்த யோசனைகளை அறிவிக்கவில்லை.

ஏனெனில் இந்த யோசனைகளைப் பகிரங்கப்படுத்திய அதேசமயம் தமிழருக்கு எதிராக யுத்தத்தையும் அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒழிக்கப்படும் வரை யுத்தம் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவித்திருக்கிறது.

எனவே சந்திரிகா அரசு அறிவித்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் ஒரு நிலையான சமாதானத்துக்கும், நிரந்தர அரசியல் தீர்வுக்கும் வழிகோலப்போவதில்லை. மாறாக ஓர் நீண்டகால யுத்தத்துக்கே வழி வகுத்துள்ளது.

### ஏமாற்று முகமூடி

இந்த அரசியல் யோசனைகள் இராணுவத் தீர்வை நியாயப்படுத்துவதற்காகப் போடப்பட்ட ஒரு ஏமாற்று முகமூடியே தவிர வேறு எதுவும் அல்ல.

சமாதான வழி தழுவி தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் உன்னத நோக்கு சந்திரிகா அரசுக்கு இருந்திருக்குமானால்—

விடுதலைப் புலிகளுடன் நடத்திய சமாதானப் பேச்சுக்களின்போது — தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து — ஒரு தீர்வுத் திட்டத்தையும் புலிகளின் பரிசீலனைக்கு சமர்ப்பித்திருக்கலாம்.

ஆனால் சந்திரிகா அரசு அப்படிச் செய்யவில்லை. பதிலாக இராணுவ நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேச்சுக்கள் முறிவடைவதற்கான புறநிலைகளை உருவாக்கியது.

அன்றும் சரி இன்றும் சரி இராணுவத் தீர்விலேயே அரசு நம்பிக்கை வைத்துள்ளது.

இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை அழித்துவிட்டால் தான் விரும்பியவாறு ஏதாவது அரை குறைத் தீர்வுத் திட்டத்தை தமிழ் மக்கள் மீது திணித்து விடலாம் என்று சந்திரிகா அரசு எண்ணுகிறது போலும்.

### கேலிக்கூத்து

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு என்றும், விடுதலைப் புலிகளுக்கு இராணுவத் தீர்வு என்றும் கேலிக் கூத்தான அணுகு முறையை அரசாங்கம் கடைப்பிடிக்கிறது.

அதிகாரப் பரவலாக்கம் என்ற மாயையைக் காட்டி தமிழ் மக்களுக்கு போலியான நம்பிக்கையைக் கொடுத்து விடுதலைப் புலிகளையும், மக்களையும் பிளவுபடுத்தி விடலாம் என அரசாங்கம் கனவு காண்கிறது.

புலிகள்தான் மக்கள்; மக்கள்தான் புலிகள் என்ற யதார்த்த உண்மையைப் புரிந்து கொள்ளாத அரசு புலிகளை ஓரங்கட்டிவிட்டு தமிழ் மக்களை ஏமாற்றி வென்றெடுக்கலாம் என நினைக்கிறது.

இந்த வரலாற்றுத் தவறையே முந்திய அரசும் இந்தியா அரசும் இழைத்தன என்பதை சந்திரிகா அரசு உணர்ந்து கொள்ளாதது எமக்கு வியப்பாக இருக்கிறது.

இராணுவ ரீதியில் புலிகளை நசுக்கி விட்டு மாகாண சபைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்று படுதோல்வி கண்ட இந்தியாவின் தவறான அணுகு முறையையே இந்த அரசும் கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளது.

### விஷப் பரீட்சை

உலகத்தின் மிகப் பெரிய இராணுவத்தைக் கொண்டும், இந்திய வல்லரசால் நிறைவேற்ற முடியாமல் போன திட்டத்தையே சந்திரிகா அரசு இப்போது செயற்படுத்த முனைகிறது.

அன்றும் சரி இன்றும் சரி மக்கள் பலம் புலிகளின் பின்னால் அணி திரண்டு நிற்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாத இந்த அரசாங்கம் மிகவும் ஆபத்தான விஷப் பரீட்சையில் இறங்கியுள்ளது. இதனால் எழும் பாரதூரமான விளைவுகளுக்கு சந்திரிகா அரசே பொறுப்பேற்க வேண்டும்.

இராணுவ ரீதியில் வெற்றி கண்ட பின்னர் — அதாவது விடுதலைப் புலிகளை முற்றாக அழித்த பின்னர் — இந்த அரசியல் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை செயற்படுத்தப் போவதாக அரசாங்கம் கூறியுள்ளது.

பௌத்த மாசங்கத்தலைமைக்கு இவ்வாறான ஒரு உறுதியையும் அரசு அளித்துள்ளது.

இதுதான் அரசின் நிலைப்பாடு என்றால் இந்தத் தீர்வு யோசனைகள் ஒருபோதுமே நிறைவேற்றப்பட மாட்டாது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவத்தால் தோற்கடிக்கவும் முடியாது; முற்றாக அழித்துவிடவும் முடியாது. புலிகள் அழிக்கப்பட்டால் இத்தீர்வு யோசனைகளை செயற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமோ, தேவையோ அரசாங்கத்துக்கு இருக்கப்போவதில்லை.

### அங்கும் இங்கும்

இந்த அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தமிழரின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் என்ற ரீதியில் தென்னிலங்கையில் மிகவும் சூடான விவாதமும், சர்ச்சையும் எழுந்துள்ளது.

ஆனால் தமிழீழத்தில் எமது மக்கள் எதிர்கொண்டு நிற்கும்
[ 6ஆம் பக்கம் பார்க்க]

# புலனாய்வுப் போரை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
முறைகளில் ஓர் புலனாய்வுப் போரை சிங்கள, இந்திய உளவு நிறுவனங்கள் எமது தேசத்தின் மீது கட்டவிழ்த்து விடும் இறுதி நேரம் இது. இதனால் நாம் எல்லோரும் எச்சரிக்கை உணர்வுடன் இருக்கவேண்டும்.

முன்னர் பல தடவைகளும், ஏன் அண்மைக் காலத்திலும் கூட காட்டிக் கொடுப்புகளால் ஏற்பட்டு வரும் பாரிய இழப்புக்களைக் கண்முன்னே கண்டுள்ளோம். ஆகவே விடுதலைக்காக எமது மக்களும், போராளிகளும் சிந்துகின்ற ஒவ்வொரு துளி இரத்தமும் வீணாகப் போகாதிருக்க மக்களே காவல் இருக்கவேண்டும்.

புலிகளின் போர்த் தளபாடங்கள், போர் நகர்வுகள் பற்றிய தகவல்களை அறிதல், மற்றும் மக்கள் கூடும் இடங்களில் குண்டு வைத்து நாச வேலைகள் செய்தல் போன்ற எதிரியின் முயற்சிகள் இன்னும் தொடருகின்றன. அத்துடன் பொய்ப் பிரசாரங்களையும், போராட்ட வெற்றி தொடர்பான அவநம்பிக்கைக் கருத்துக்களையும் எமது மக்கள் மத்தியில் பரப்பி எமது மக்களது போராட்ட உறுதியை உடைக்கவும் எதிரிப் புலனாய்வு நிறுவனங்கள் முயல்கின்றன. போராட்டத் தேரை இழுத்துச் செல்பவர்கள் மக்கள்தான். எனவே இத்தகைய தீய சதி நோக்கம் கொண்ட பிரசாரங்கள் குறித்து தெளிவுடனும், விழிப்புடனும் எமது மக்கள் இருக்கவேண்டியது அவசியமாகின்றது.

### புலனாய்வு கண்களால் அளவிடுங்கள்

எல்லாவற்றிற்கும் மேலாக எமக்குத் தெரிந்த போராட்ட செய்திகளை இரகசியங்களை நாங்கள் எவருடனும் கதைக்காது இருக்க வேண்டும். இரகசியம் காத்தலையும், எச்சரிக்கை உணர்வையும், எதிரியுடனான புலனாய்வுப் போரை முறியடிக்க உதவுகின்ற "ஆட்டிலறி"களாகவும், விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளாகவும் கருதலாம், எனவே விழிப்புணர்வே போர்க்கால வாழ்வின் பிரதான கடமையாக இருக்கவேண்டும்.

நீங்கள் சந்தித்துள்ள உங்களது குடும்பப் பிரச்சினைகளில் ஒன்றாகவே இந்தப் பிரச்சினையை கருதி செயற்படவேண்டும்.

உங்களது மனைவி, அல்லது கணவன், பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள், சுற்றங்களுக்கும் இதுபற்றிக் கூறுங்கள். எப்போதும் விழிப்புடன் இருங்கள். சந்தேகமானவர்கள், வித்தியாசமாகத் தென்படுபவர்கள் என எல்லோரையும் புலனாய்வுக் கண்களால் அளவிடுங்கள், அத்துடன் உங்களது வாய்களுக்கும் "செண்றி" போடுங்கள்.

### வெள்ளம் வருகிறது அணை கட்டு வோம்

சின்னஞ் சிறிய கியூபா நாடு உலக வல்லரசுக்கு எதிராக நின்று பிடித்து, நிமிர்ந்தது எவ்வாறு?

சுற்றிவர எதிரி நாடுகள் இருந்தபோதும் இஸ்ரேல் இன்றும் தலைநிமிர்ந்து நிற்பது எவ்வாறு?

இவை எல்லாம் அந்தந்த நாட்டு மக்களின் ஒருமித்த விழிப்புணர்வால் — அந்நிய உளவு அமைப்புக்களுக்கு எதிரான மக்களின் ஒத்துழைப்பால் — சாத்தியமானதென்பது உலகறிந்த உண்மை.

எல்லாம் நடந்து முடிந்த பின் "அந்த ஆளை எங்களுக்குத் தெரியும்", 'அப்பவே நினைச்சனான்', 'அவங்களைப் பார்க்கவே ஒருமாதிரி இருந்தது", என்று கூறுவதை விட, வெள்ளம் வருகின்றது, விரைவாக அணைகட்டுவோம் —

எனவே நீங்கள் அறிந்த அல்லது உங்களுக்குக் கிடைத்த சிறியதோ, பெரியதோ எந்தச் செய்தியானாலும் அவற்றைக் கீழ்க்கண்ட முகவரிகளுக்கு அறியத்தாருங்கள். உரிய தகவல்களை உரிய நேரத்தில் இந்த இடங்களுக்கு கிடைக்கச் செய்யுங்கள். இவற்றின் மூலம் தேசத்தின் விடிவிற்கு எதிராக வரும் தடைகளை உடைத்து தேசத்தின் விடியலை விரைவு படுத்துவோம்.

நீங்கள் தகவல் கொடுக்க வேண்டிய இடங்கள்:—

★ செய்தி தகவல் மையம், கோப்பாய் சந்தி.

★ செய்தித் தகவல் மையம், நாவலர்மடம், நெல்லியடி.

★ செய்தித் தகவல் மையம், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

★ செய்தித் தகவல் மையம், யாழ். வீதி, சாவகச்சேரி.

[ஐ]

# தமிழ்க் குழுக்களுக்கே----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
வில்லை;

தவறான கண்ணோட்டத்தில் சர்வதேச உலகம் தெரிவிப்பதையிட்டு நாம் கவலைப்படத் தேவையும் இல்லை.

இப்படி அவர் கூறினார்.

### தொண்டாவின் கருத்து

புலிகளிடம் ஆட்சியை 5வருடம் கொடுக்க வேண்டும் என்று, அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளது குறித்து அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், —

கடந்த 10 வருடங்களாக நாம் ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறோம். மேலும் 5 வருடம் கொடுப்பதால் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று எப்படிக் கூறமுடியும்?

எமது ஆட்சி தொடர்ந்து நடக்கிறது. அரசு ஏற்றுக் கொள்கிறதோ இல்லையோ எமது ஆட்சி தொடர்கிறது.

புலிகள் நிர்வாகக் கட்டமைப்பை அமைத்து, இங்கு ஓர் அரசை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த கட்டமைப்புக்களில் இருந்து தான் ஒரு தீர்வு வரவேண்டும் என்று தொண்டமான் நினைக்கிறார். அது தவறு இல்லை.

புலிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைத்து அதன் பின் தீர்வு வரவேண்டும் என்று அவர் விரும்புகிறார் — என்றார்.

### சர்வதேச அழுத்தம் ஏற்பட்டால்...?

ஜனாதிபதி சந்திரிகா சர்வதேச அழுத்தத்தைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளை தீர்வை ஏற்குமாறு நிர்ப்பந்தித்தால் என்ன நிலை ஏற்படும் என்ற கேள்விக்கு அன்ரன் பாலசிங்கம் பதில் அளிக்கையில் —

சர்வதேச ரீதியாக அழுத்தம் எமக்கு வராது. சர்வதேச உலகம் இன்னும் இந்தப் போராட்டத்தை அங்கீகரிக்கவில்லை.

எங்களுக்கு இராணுவ ரீதியாகவோ, வேறு வழியாகவோ அழுத்தம் போட காரணம் எதுவும் இல்லை.

ஆனால் ஸ்ரீலங்கா அரசுக்கு சர்வதேச உலகம் அழுத்தம் போடலாம்.

உண்மையில் வெளிநாடுகள் சமாதானத்தை கொண்டுவர விரும்பினால், புலிகளை ஒதுக்கிவிட்டு தீர்வு கொண்டுவர முடியாது என்று ஸ்ரீலங்கா அரசுக்குப் பல்வேறு வகையான அழுத்தங்களை போடலாம்.

போரை நடத்திக் கொண்டு சமாதானத் தீர்வை கொண்டு வரமுடியாது. ஆகவே இந்த வழியைக் கைவிட்டு போரை நிறுத்தி புலிகளுடன் பேசுவதற்கான வழிமுறைகளை ஆராயச் சொல்லி வெளிநாட்டு அரசுகள் சந்திரிகா அரசுக்கு ஆலோசனை கூறலாம். அதுதான் நடைமுறைச்சாத்தியமான விடயமாகும்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஒவ்வொரு நாட்டு அரசையும் சந்தித்து தீர்வுத்திட்டம்பற்றி கூறியதை வைத்து அந்த அரசுகள் அறிக்கைகளை விடுகின்றன. அவை எம்மை நிர்ப்பந்திக்கின்றன.

இத் தீர்வுதிட்டம் எமக்கும் வைக்கப்படவில்லை, எமது மக்களுக்கும் வைக்கப்படவில்லை.

எங்களுக்கு வைக்கப்பட்டுள்ளது இராணுவத் தீர்வேயாகும். இதை எதிர் கொள்ள நாம் தயாராகவிருக்கிறோம்.

இப்படி அவர் கூறினார்.

# மரண அறிவித்தல்கள்

## இராமுப்பிள்ளை தில்லையம்பலம்

(காரைநகர் - குண்டமிகரை - களபூமி)

காரைநகர் களபூமி, பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமுப்பிள்ளை தில்லையம்பலம் 30-7-95 இல் காரைநகரில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், சின்னம்மா, காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சுப்பிரமணியம், மற்றும் வேலுப்பிள்ளை, கந்தசாமி, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் காரைநகரில் நடைபெற்றன. துக்க அனுஷ்டிப்பு இன்று 12-8-95 இல் எமது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
K.R. கந்தசாமி
(சகோதரர்)

59, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[38000]

## வேலுப்பிள்ளை இராசம்மா

(மாப்பாணவூரி - காரைநகர்)

காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியுமான வேலுப்பிள்ளை - இராசம்மா 1 - 8 - 95 திருகோணமலையில் காலமானார்.

இவர் ஆறுமுகம் (அருளம்பலம்) தங்கராசா காலஞ்சென்ற கனகசபை, சுந்தரம்மா, மதியாபரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈசுவரி, குமரகுரு ஆகியோரின் சிறிய தாயாரும், ஜெயமணி (கொழும்பு), வைரவநாதன் (திருகோணமலை), செந்தில்நாதன் (வடக்கம்பரை), தனலட்சுமி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுப்பிரமணியம், புவனேஸ்வரி, ஜெயலட்சுமி, சந்திரகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவலோகநாதன் (National University of Singapore), மகாதேவன் (கனடா), மகேஸ்வரன் (கண்டி பேராதனை), ஜெயரமேஸ், பாலினி, கிருஸ்ணவேணி (மட்டக்களப்பு பல்கலைக்கழகம்), கணேஸ்வரி, சந்திரரூபன், முருகானந்தன், சிவநாதன், ஜெகநாதன், யசோதா, கவிதா, நந்தகுமாரன், ரஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திருகோணமலையில் 1 - 8 - 95 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. செந்தில்நாதன் (மகன்)
வே. தனலட்சுமி (மகள்)

19, பொன்னையா லேன்,
ஒட்டுமடம்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(37998)

## திருமதி மகேஸ்வரி இரத்தினம்

திருநெல்வேலி, காளிகோவிலடியைச் சேர்ந்த அமரர் முருகேசு இரத்தினம் (போதனாசிரியர், அரச விவசாயப் பண்ணை, திருநெல்வேலி) அவர்களின் அன்பு மனைவி மகேஸ்வரி 11- 08- 95 அன்று காலமாகிவிட்டார்.

இவர் கனகராஜா [ஓவியர் கலைவாணிகலையகம்), கேதீஸ்வரன் [சவூதி], ஜெயசீலன் (ஓவியர்), நித்தியானந்தன் (ஆசிரியர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்], சறோஜினிதேவி, மங்கையர்க்கரசி, மகாலட்சுமி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானம், புஸ்பம், மாணிக்கம், அமரர் சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரியும், சுப்பிரமணியம், பாக்கியம் செல்லம்மா, தங்கவேலு, சிவபாக்கியம், வைத்திலிங்கம், இராசையா, பராசக்தி, காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, பொன்னுச்சாமி ஆகியோரின் மைத்துனியும், புஸ்பராணி, தெய்வநாயகி, பாலேந்திரன் [வாணி நகையகம்), சற்குருநாதன் [திர்ஷிகா கலைக்கூடம்], சூரியகுமார் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-8-95] நண்பகல் 12 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. நித்தியானந்தன
[மகன்]
(ஆசிரியர், யாழ்/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்)

திருநெல்வேலி.

(37997)

## சின்னத்தம்பி செல்லையா

(சுப்பண்ணை]

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் தற்போது நீர்வேலி மாசுவஞ் சந்தியில் வசிப்பவருமாகிய சின்னத்தம்பி செல்லையா நேற்று இரவு காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்றுசனிக்கிழமை (12-08-1995] பிற்பகல் 1 30 மணியளவில் அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. பரமேஸ்வரி
[மனைவி]

[38002]

# அரசின் யோசனை: ராணுவ....

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யதார்த்தம் வேறு.

இங்கு போரும், அழிவும், சாவும், பொருளாதார நெருக்குவாரங்களையுமே எமது மக்கள் சந்தித்து நிற்கிறார்கள்.

அரசியல் பரவலாக்கத்துக்குப் பதிலாக அரச பயங்கரவாதமே இங்கு பரவலாக்கம் செய்யப்படுகிறது.

நாம் இங்கு இன்னொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த அரசியல் பரவலாக்கம் என்பது ஒரு முழுமையான தீர்வுத்திட்டமாக அல்லாமல் வெறும் யோசனைகளாகவே சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

இந்த யோசனைகள் பற்றி முக்கிய அமைச்சர்கள் சிலர் நாளுக்கு நாள் வெவ்வேறான விளக்கங்களையும், வியாக்கியானங்களையும் அளித்து வருகின்றனர்.

வடக்கு,கிழக்கு இணைக்கப்படமாட்டாது என்றும்—

வடக்கு — கிழக்கில் உள்ள பெரு நிலப்பகுதிகள் துண்டாடப்படும் வகையில் எல்லை நிர்ணயம் செய்யப்படும் என்றும்—

ஒற்றையாட்சிக்கு பங்கம் ஏற்படாது என்றும்—

தமிழர்களுக்கு விசேட அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை என்றும்—

இது முழு இலங்கைக்குமான ஒரு நிர்வாக ஒழுங்கமைப்பு என்றும் — இந்த அமைச்சர்கள் விளக்கங்களை அளித்து வருகின்றனர்.

அது மட்டுமன்றி இந்த யோசனைகளில் உள்ள சில முக்கிய அம்சங்கள் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் திருத்தப்பட்டு, மாற்றப்பட்டு, நீக்கப்படலாம் எனவும் சொல்கிறார்கள்.

### இறுதிமுடிவு எடுப்போர்

இறுதியாக சிங்களப் பெரும்பான்மை நாடாளுமன்றமும், சிங்களப் பொது மக்களுமே இந்த யோசனைகள் பற்றி இறுதி முடிவை எடுப்பர் என்றும் கூறுகிறார்கள்.

அரசாங்கத் தரப்பில் இருந்து தெரிவிக்கப்படும் இந்தக் கருத்துக்களில் உண்மை இல்லாமல் இல்லை.

எனவே இந்த யோசனைகள் குறித்து நாம் இப்போதே எமது கருத்துக்களைத் தெரிவிப்பதில் அர்த்தமில்லை.

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வைத் தீர்மானிப்பது தமிழ் மக்களாகவே இருக்க வேண்டும்.

சுயநிர்ணய உரிமையின் அர்த்தமும் அதுதான். நாம் ஒரு சிறுபான்மைக் குழு அல்ல நாம் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் சுதந்திரமான முறையில் எமது அரசியல் தலைவிதியை நாமே தீர்மானிக்கும் உரிமை எமக்கு உண்டு.

எமது அரசியல் தலைவிதியை மற்றொரு இனம் தீர்மானிக்க முடியாது.

எம்மிடம் கலந்தாலோசிக்காமல், எமது விருப்பத்துக்கு மாறாக எந்தஒரு தீர்வுத் திட்டத்தையும் எமது மக்கள் மீது திணிக்க முடியாது.

இந்த அரசியல் பரவலாக்கல் யோசனைகள் தமிழ் மக்களுக்கோ அன்றி அவர்களின் உண்மையான பிரதி நிதிகளான விடுதலைப் புலிகளுக்கோ பரிசீலனைக்கு முன் வைக்கப்பட இல்லை.

ஆயுத முனையில் இராணுவ வன்முறை மூலமாக அதனைத் திணிக்கலாம் என அரசு கருதுகின்றது. இராணுவ பலாத்காரம் மூலமாக அரசியல் தீர்வுகாணவினையும் இந்த விபரீதமான அணுகு முறையை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

இந்த அரசியல் பரவலாக்கல் யோசனைகள் எதிர்காலத்தில் எவ்வித மாற்றத்தைக் காணும், எவ்வித வடிவத்தை எடுக்கும் என்ற தீர்க்கதரிசன பார்வை ஏதும் இன்றி கொழும்பில் உள்ள தமிழ் குழுக்கள் எடுத்த எடுப்பில் இந்த யோசனைகளை வரவேற்றிருக்கிறார்கள்.

இது பற்றி நாமோ எமது மக்களோ ஆச்சரியப்படவில்லை.

### தமிழ்க் குழுக்கள்

தமிழ் மக்களால் ஒதுக்கப்பட்டு, மோசடித் தேர்தல் மூலம் நாடாளுமன்றத்தில் நுழைந்து கொண்ட இந்தக் குழுக்கள் தமிழ் மக்களின் தேசிய நலனில் என்றுமே அக்கறை காட்டவில்லை.

குறுக்கு வழியில் பெற்றுக்கொண்ட தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக யார் தான் எந்த எலும்பை எறிந்தாலும் அதனைக் கவ்விக் கொண்டு செல்வதற்கு இவர்கள் காத்துக்கிடக்கிறார்கள்.

இவர்களது நிலைப்பாடு குறித்து நாம் கவலை கொள்ளவில்லை. இவர்களில் வயது முதிர்ந்த பழம் அரசியல்வாதிகளும் இருக்கின்றனர்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு அரசியல் பாலைவனத்தில் அலைந்து திரிந்த இவர்கள் இப்போது சந்திரிகா அரசின் குடையின் கீழ் குளிர் காய்ந்து வருகிறார்கள்.

சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைக் கைவிட்டு மாவட்ட சபைகளையும், மாகாண சபைகளையும் பிரமாதமான தீர்வுத் திட்டங்களாகப் புகழ்ந்துரைத்த இவர்கள் இப்போது சந்திரிகாவின் அரசியல் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை மிகவும் முற்போக்கானது எனப் பாராட்டுகிறார்கள்.

அரசியல் விவேகம் பற்றி புலிகளுக்குப் போதிக்கிறார்கள்.

இவர்களது அரசியல் ஞானம் பற்றி எமது மக்களுக்கு நன்கு தெரியும். அரசியல் பரவலாக்கம் என்ற ஆசை வலையில் சிக்கி மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களுக்கு இவர்கள் துரோகம் இழைக்க முனைகிறார்கள். இவர்களை நாம் மன்னித்தாலும் எமது இனத்தின் வரலாறு மன்னிக்கப் போவதில்லை.

### சமாதானப் பாதையை கைவிடவில்லை

நாம் ஒரு பாரிய யுத்தத்தை சந்தித்துள்ளபோதும் சமாதானப் பாதையை கைவிடவில்லை.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறைகளைக் கைவிடவில்லை.

நாம் போருக்கும் தயார்; சமாதானத்துக்கும் தயார்!

சந்திரிகா அரசு சமாதானக் கதவை இழுத்து மூடிவிட்டதைப்போன்று நாம் சமாதானக் கதவுகளை மூடிவிடவில்லை.

போரை நிறுத்தி சமாதான சூழலை ஏற்படுத்தி எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை அரசாங்கம் தீர்த்து வைக்குமானால் நாம் மீண்டும் பேச்சுக்களில் பங்கு கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் அதேவேளை அரசாங்கம் யுத்தத்தை தீவிரப்படுத்தி தமிழினத்தைக் கொன்றொழிக்க முயலுமாயின் நாம் சமாதானக் கதவுகளை மூடிவிட்டு தனி அரசை நிர்மாணிப்பதைத் தவிர வேறுவழி இல்லை.

எனவே சமாதானப்பாதையில் சென்று தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதா அல்லது யுத்தத்தின் வழியில் சென்று நாட்டைப் பிளவுபடுத்துவதா என்ற முக்கிய முடிவை எடுப்பது சந்திரிகா அரசைப் பொறுத்தது — இவ்வாறு திரு. பாலசிங்கம் தெரிவித்தார். (அ-ஐ-3)

## ரஸெப் தேர்வு

யாழ்ப்பாணம், ஒக, 12

ரஸெப் ஆங்கில நெறி பயில்வோருக்கான மீட்டற் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பலாலி ஆசிரியகலாசாலையில் நடைபெறும் என மாநில இணைப்பாளர் அறிவிக்கிறார். (இ)

## பரீட்சை ஒத்திவைப்பு

பொது எழுதுநர் சேவை தரம் 1 க்குப் பதவி உயர்த்துவதற்கான பரீட்சை எதிர் வரும் செப்டம்பர் மாதத்திற்குப் பின்போடப்பட்டுள்ளது. இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அரசாங்க அதிபர் கொழும்பிலிருந்து அறிவித்துள்ளார்.

## ஆதீனத்தில் சைவ சமய பயிற்சி வகுப்பு

நல்லை ஆதீனத்தினால் சமய பாடப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தினமும் காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும் இப்பயிற்சி வகுப்பில் கற்பதற்கு வயதுக் கட்டுப்பாடுகள் எதுவுமில்லை என ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

சமய பாடம் பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்கள் இதனால் பயனடைய முடியும் எனவும் பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் ஆதீன முதல்வர் குறிப்பிட்டார். (ஒ-111)

ஆரம்பமாகிவிட்டது!

வேரும் விழுதுகளும்

கல்வியியல் கண்காட்சி - 95

இடம்: நுணாவில் கண்ணகை அம்மன் கோவிலடி

பார்வையாளர்களுக்காக 15 — 08 — 1995 இல் திறந்து விடப்படும்.

- செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்.

[37973]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது